CC .39/2017

19.07.2023

அ.சா.1,

பெயர்:சாந்தி

க/பெ. முருகன்

பு.சா.1 கு.ப.ம.எண்.7000/2021-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** எதிரிகள் அனைவரும் எனது பக்கத்து வீட்டில் உள்ளார்கள் என்றால் சரிதான், எனக்கும் அவர்களுக்கும் சண்டை சச்சரவு காரணமாக முன் விரோதம் உள்ளது என்றால் சரிதான்.

2. சம்பவம் நடைபெற்ற சமயத்தில் இரண்டு முறை கைகளப்பு நடந்தது என்றால் சரிதான். முதல் பிரச்சனை நடைபெறும்போதே நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. அந்த புகாரில் சம்பவ இடத்தில் என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் எதிரிகளை அடித்ததால் எதிரிகள் என்மீது புகார் அளித்தார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் கு.எண்.200/2016 என்ற முதல் தகவல் அறிக்கையினை போலீசார் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான்.

4. மேற்படி வழக்கில் நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்தினேன் என்றால் சரிதான்.

5. முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் கு.எண்.200/2016 **எ .த.சா .ஆ. 1** ஆகும்,

6. STC No. 51/2017 ல் எதிரியால் குற்றத்தை ஒப்புக்கொள்ளப்பட்ட சான்றிட்ட உத்தரவு நகல் **எ.த,சா, ஆ 2** ஆகும்.

7. என் மீது போடப்பட்ட வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. எங்களுக்குள் ஏற்பட்ட மோதலில் என்னை அடித்தார்கள் எனக்கு ரத்தக் காயம் இல்லை நான் மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை எனது மகனுக்கு தான் காயம் ஏற்பட்டது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான் .

9.மேற்படி எனது மகனுக்கு ஏற்பட்ட காயம் செங்கல்லால் அடித்து ஏற்பட்டது என்றால் சரிதான். போலீஸ் விசாரணையிலும் எனது வாக்குமூலத்திலும் செங்கல்லால் அடித்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கட்டையாலும், செங்கல்லாலும்

அடித்தார்கள் என கூறியுள்ளேன், அதில் என் மகனுக்கு சட்டையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்,

10. போலீஸ் சம்பவ இடம் வந்து கட்டை, என் மகன் இரத்தக்காயம் படிந்த சட்டை செங்கல் ஆகியவற்றை கைப்பற்றி சென்றார்கள். செல்போனில் போட்டோ எடுத்துச் சென்றனர் என்றால் சரிதான்,

11. இந்த சம்பவம் 3 மணி நேரம் நடந்தது என்றால் சரிதான். நிறைய கூட்டம் ஆகி விட்டது என்றால் சரிதான். போலீசார் சம்பவம் நடந்த போது அங்கு வந்தார்கள் என்றால் சரிதான். பிரச்சனை செய்த அனைவரையும் காவல் நிலையம் அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். நாங்கள் போலீசாரிடம் எழுதிக் கொடுத்துவிட்டு எனது மகனை அழைத்துக்கொண்டு மருத்துவமனை சென்றுவிட்டோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று போலீசார் எங்களை விசாரித்தார்கள், அதன் பின் விசாரணை செய்யவில்லை. எதிரி தீபிகா கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான், காலையில் சம்பவம் நடக்கும் போதும் தீபிகா இல்லை, காவல் நிலையம் வந்து 4ம் எதிரி தீபிகா புகார் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

12. தீபிகா எழுதிக் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் திட்டவோ அடிக்கவோ இல்லை என்றாலும் சரியல்ல, நான்தான் எதிரிகளை அடித்து எதிரிகள் புகார் கொடுத்ததினால் பயந்த போய் அதற்காக ஒரு பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E. Prakasam)
Judicial Magistrate No. II,
Pollachi.